தொலைநிலைக்கல்வி இயக்ககம் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.
12 JUN 2015

143

பதிவாளர் பிரிவு
- 9 JUN 2015
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-10.

சுருக்கம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் – தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் அறிமுகநிலைப் படிப்பு மற்றும் புதிய பாடப்பிரிவுகள் தொடங்க அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.2–1)த் துறை

அரசாணை (நிலை) எண்.111

112

நாள்.03.06.2015
மன்மத– வைகாசி –20
திருவள்ளுவராண்டு 2046

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.197, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.2–1) துறை, நாள்.30.07.2013

படிக்க:–

2. தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கடித தொ.நி.க.எண்.டி1/731/2014, நாள்.19.05.2014, 10.09.2014 மற்றும் 03.03.2015
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.4410 / வ.செ.2 / 2014, நாள்.19.06.2014

======

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககம் வாயிலாக (i) தொடக்க நிலை படிப்பு – ( Pre – foundation course)–1 வருடம், (ii) அடிப்படை நிலை படிப்பு – (Foundation Course) –2 வருடம் ஆகிய பாடப்பிரிவுகளை நடத்தவும், அதில் பின்வரும் பாடப்பிரிவுகளை பாடத் திட்டங்களாக வைத்துக் கொள்ள அனுமதி அளித்தும் ஆணையிடப்பட்டது:–

i) தமிழ்
ii) ஆங்கிலம்
iii) கணிதம்
iv) பொருளாதாரம்
v) புவியியல்
vi) வணிகவியல்

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர், தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பத்தாம் வகுப்பிற்கு நிகரான தொடக்கநிலைப் படிப்பு – Pre – Foundation Course (ஓராண்டு), மற்றும் மேல்நிலை வகுப்பிற்கு (+2) நிகரான அடிப்படை நிலைப் படிப்பு – Foundation Course (ஈராண்டு) ஆகியவற்றை தமிழ் வழியில் நடத்தத் திட்டமிடப்பட்டு, தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இதற்கான அரசின் அனுமதி பெறப்பட்டு, இப்படிப்புகள் கடந்த 2013–14 ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இதனைத் தொடர்ந்து எட்டாம் வகுப்பிற்கு இணையான அறிமுகநிலைப் படிப்பு – Introductory Course (ஓராண்டு)–ஐத் தொடங்கவும் மாணவர்களிடமிருந்து கருத்து பெறப்பட்டு, அதற்கு 09.04.2014 அன்று நடைபெற்ற ஆட்சிக்குழுவின் ஒப்புதலும் தற்பொழுது பெறப்பட்டுள்ளது எனவும், இந்த அறிமுகநிலைப் படிப்பில் பின்வரும் பாடப்பிரிவுகளை உள்ளடக்கியப் பாடத்திட்டத்தை உருவாக்கவும், தமிழ் வழியில் நடத்தவும் கருதப் பெற்றதாகவும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

1. தமிழ்
2. ஆங்கிலம்
3. கணிதம்
4. அறிவியல்
5. சமூக அறிவியல்

4. தொடக்கநிலை மற்றும் அடிப்படைநிலைப் படிப்புகளைப் போன்றே, தமிழ் தவிர, மற்ற பாடப்பிரிவுகளுக்கென பிற அரசு கல்லூரிகளிலுள்ள கல்வியாளர்களைக் கொண்டு, அப்படிப்பிற்கான பாடத்திட்டக் குழுவினை தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் அமைத்து, பாடத்திட்டங்கள் உருவாக்கப் பெற வேண்டும் என முடிவாகியுள்ளதாகவும், தெரிவித்து பின்வரும் இனங்களுக்கு பதிவாளர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்.

I. தொடக்கநிலைப் படிப்பு – Pre Foundation Course (ஓராண்டு), மற்றும் அடிப்படை நிலைப் படிப்பு – Foundation Course (ஈராண்டு) ஆகியவற்றைப் போன்றே, அறிமுகநிலை – Introductory Course (ஓராண்டு) படிப்பினையும் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்கக வாயிலாக நடத்துதல்.

II. இப்படிப்பிற்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களைப் பாடத்திட்டமாக வைத்துக் கொள்ளுதல்.

மேலும், மேற்படி அறிமுகநிலைப் படிப்பைச் செயற்படுத்துவதற்கென தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எவ்வித நிதிச் செலவும் இல்லை என்றும், இப்படிப்பைச் செயற்படுத்துவதற்கென புதிதாக ஆசிரியர்கள் / பணியாளர்கள் எவரும் தேவை இல்லை என்றும், தற்பொழுதுள்ள ஆசிரியர்கள் / பணியாளர்களைக் கொண்டே இப்படிப்புகளைச் செயற்படுத்தலாம் என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

5. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு தொடக்க நிலைப்படிப்பு மற்றும் அடிப்படை நிலைப் படிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டதைப் போன்று இவ்வறிமுக நிலைப்படிப்பிற்கும் அரசு நிலையில் கருதிப் பார்த்து அனுமதி வழங்கப் பெறலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

6. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளரின் கருத்துருவை 09.04.2014 நாளிட்ட ஆட்சிக்குழுவின் ஒப்புதல் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில், அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, கீழ்க்கண்ட இனங்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது:–

I. தொடக்கநிலைப் படிப்பு – Pre Foundation Course (ஓராண்டு), மற்றும் அடிப்படை நிலைப் படிப்பு – Foundation Course (ஈராண்டு) ஆகியவற்றைப் போன்றே, அறிமுகநிலை –

Introductory Course (ஓராண்டு) படிப்பினையும் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்கக வாயிலாக நடத்துதல்.

II. இப்படிப்பிற்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களைப் பாடத்திட்டமாக வைத்துக் கொள்ளுதல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ. இராசாராம்
அரசு செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக்கல்வித் துறை) அவர்களின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலாளரின் தனிச்செயலர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9
பள்ளிக்கல்வித் துறை
இருப்புக்கோப்பு / உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/6/15
பிரிவு அலுவலர்

4/6/15